

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (21.5.2025) முகாம் அலுவலகத்தில், ஜார்கண்ட் மாநிலம், ராஞ்சியில் 11.02.2025 அன்று நடைபெற்ற காவல்துறையினருக்கான 68வது தேசிய அளவிலான திறனாய்வு போட்டியில் (Police Videography Competition) தமிழ்நாடு காவல்துறை சார்பில் கலந்து கொண்டு முதலிடம் பிடித்து, தங்கப்பதக்கம் வென்ற உள்வட்ட பாதுகாப்பு பிரிவு தலைமைக் காவலர் டி.பாஸ்கரன் மற்றும் சென்னை, ஒத்திவாக்கத்தில் 17.03.2025 முதல் 22.03.2025 வரை நடைபெற்ற அகில இந்திய காவல்துறையினருக்கான 25வது துப்பாக்கி சுடும் போட்டியில் (Pistol Squatting Position Distance) 15 Yards பிரிவில் வெண்கல பதக்கம் வென்ற உள்வட்ட பாதுகாப்பு பிரிவு காவலர் ப. சுந்தரபாண்டி ஆகியோர் சந்தித்து, பதக்கங்களை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.



உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், மண்டவாடி ஊராட்சியில் புதியதாக கட்டப்பட்ட கலைஞரின் கனவு இல்லத்தை 20.05.2025 அன்று திறந்து வைத்தார்.

## மதுரைக்கு வருகை தரும் முதல்வருக்கு பிரமாண்ட வரவேற்பு!

# மதுரை ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர் பி.மூர்த்தி, கோ.தளபதி எம்.எல்.ஏ., மு.மணிமாறன் அறிக்கை!





மதுரை, மே 22 -

வரும் ஜூன் 1ஆம் தேதி மதுரை உத்தங்குடி கலைஞர் திடலில் நடைபெற உள்ள மாநில பொதுக்குழு கூட்டத்தில் கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்பிக்க வருகை தருவதையொட்டி சிறப்பான வரவேற்பு கொடுப்பது, விழாவை எழுச்சியுடன் சிறப்பாக நடத்துவது, கழக ஆக்கப் பணிகள் குறித்த மதுரை ஒருங்கிணைந்த மாவட்ட கழக செயல்வீரர்கள் கூட்டம் நாளை (23ஆம் தேதி) நடைபெற உள்ளதாக மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ. தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் மு. மணிமாறன் ஆகியோர் தெரிவித்துள்ளார்கள்.

இதுகுறித்து அவர்களது அறிக்கை வருமாறு:-

திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க நாடே போற்றும் வகையில் தமிழ்நாட்டில் மிக முக்கியத்துவம் வாய்ந்த கழக மாநில பொதுக்குழு கூட்டம் வருகிற ஜூன் 1ம் தேதி எழுச்சியுடன் மதுரை உத்தங்குடி கலைஞர் திடலில் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது.

இந்த சிறப்புமிக்க பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்பதற்காக கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகை தர உள்ளார்.

வரலாறு படைக்க வருகை தரும் கழகத் தலைவரை எழுச்சியுடன் வரவேற்று, வரலாறு படைக்கும் வகையில் பொதுக்குழு கூட்டம் நடத்துவது குறித்தும், கழக ஆக்கப் பணிகள் குறித்தும் மதுரை ஒருங்கிணைந்த மாவட்ட திமுகவுக்குட்பட்ட மதுரை வடக்கு, தெற்கு மற்றும் மாநகர் மாவட்ட மாவட்ட கழக செயல்வீரர்கள் கூட்டம் நாளை (23.05.2025 - வெள்ளிக்கிழமை) காலை 9.30 மணிக்கு மதுரை உத்தங்குடியில் அமைந்துள்ள ஜெ.எப்.ஏ. லக்கி பேலஸ் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

முக்கியத்துவம் வாய்ந்த இந்த சிறப்புமிக்க செயல் வீரர்கள் கூட்டத்திற்கு மதுரை வடக்கு, தெற்கு மற்றும் மாநகர் மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட, மாநில கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக, கிளைக்கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என அனைவரும் பெரும் திரளாக பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி, மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழக செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ, அறிக்கை!



விழுப்புரம், மே 22 -

விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ். செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு ஆலோசனைக் கூட்டம் மண்டல பொறுப்பாளர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில், சட்ட மன்றத் தொகுதி மேற்பார்வையாளர்கள் செஞ்சி கார்த்திகேயன், மயிலம் இளபுகழேந்தி, திண்டிவனம் ஜாஃபர் அலி ஆகியோர் முன்னிலையில் இன்று (22.05.2025 - வியாழக்கிழமை) காலை 10.00 மணி அளவில் திண்டிவனம் ஹோட்டல் ஆர்யாஸ் மினி ஹாலில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, நிர்வாகிகள், பொதுக்குழு, செயற்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. 2026சட்டமன்ற தேர்தல் பணிகள் சம்பந்தமாக,

2.கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சீனா, சிங்கப்பூர், தாய்லாந்தில் கொரோனா பரவல் அதிகரிப்பு!

புதுடெல்லி, மே 22 -

ஆசியாவில் மீண்டும் புதிய கொரோனா அலை உருவாகியுள்ளது. இந்தியாவில் கொரோனா தொற்றால் 257 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தென்கிழக்கு ஆசியாவில் கொரோனா தொற்றால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை சமீபகாலமாக அதிகரித்து வருகிறது. தற்போது பரவி வரும் ஒமைக்ரான் பிஏ.2.86 ஜேஎன்1 வகை கொரோனா வைரஸ் பரவல் அதிகம் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. மக்கள் தொகை நெருக்கம் மிகுந்த சிங்கப்பூர், சீனா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் எடுக்கப்பட்ட மாதிரிகளில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதை தொடர்ந்து, முக்கிய நகரங்களில் சுகாதார துறையின் செயல்பாடுகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. மக்கள் புதிதாக கொரோனா தடுப்பூசி போட்டுக்கொள்ளுமாறு தாய்லாந்து, ஹாங்காங், சிங்கப்பூர் அரசுகள் அறிவுறுத்தியுள்ளன.

இதனிடையே, இந்தியாவில் கொரோனா பரவல் கட்டுக்குள் உள்ளதாக ஒன்றிய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. மே 19ம் தேதி நிலவரப்படி, நாட்டில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 257 ஆக உள்ளது. நாட்டின் மக்கள் தொகையை கருத்தில் கொள்ளும்போது இது மிக மிக குறைவு என்று குறிப்பிட்டுள்ளது. இருப்பினும், நிலைமையை சுகாதார அமைச்சகம் தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மதுரை வடக்கு மாவட்டம்

## பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல்

### தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு

மதுரை வடக்கு மாவட்டக் கழக நிர்வாக அமைப்பில் "மதுரை மேற்கு" சட்டமன்றத் தொகுதியினை சேர்த்து கடந்த 13.2.2025 அன்றைய தலைமைக் கழக அறிவிப்பு வெளியிட்ட காரணத்தால், மதுரை வடக்கு மாவட்டத்தில் இரண்டு பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதால்,

மதுரை வடக்கு மாவட்டம், இரண்டு பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, மே 20 (செவ்வாய்கிழமை) அன்று ரூ.25000/–வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

மதுரை வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புகளுக்கு எம். மனோகரன் மற்றும் எ.கே. முருகானந்தம் ஆகியோர் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

மதுரை வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர்களாக,

**திரு. எம். மனோகரன்**
*5, காந்திஜி ரோடு, பரவை, பரவை பேரூராட்சி,*
*மதுரை - 625402.*

**திரு. எ.கே. முருகானந்தம்**
*28சி/2, ஸ்ரீவீரமாகாளி இல்லம், புலிப்பாண்டியன் தெரு,*
*ஜெய்ஹிந்துபுரம், மதுரை - 11.* ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை – 18.
நாள் : 21–05–2025.

துரைமுருகன்,
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

## சென்னை தெற்கு – காஞ்சிபுரம் வடக்கு – சேலம் கிழக்கு – புதுக்கோட்டை தெற்கு மாவட்டங்கள்

## பொதுக்குழு உறுப்பினர்கள் பொறுப்புக்களுக்கான தேர்தல்

### தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் சென்னை தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் சைதை சம்பத் – காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் எம்.டி. சண்முகம் – சேலம் கிழக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் ஷேக்மொய்தீன் – புதுக்கோட்டை தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் சீனி. பழனியப்பன் ஆகியோர் உடல் நலிவுற்று மறைவெய்திய காரணத்தால் மேற்கண்ட மாவட்டங்களுக்கான பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புகளுக்குப் போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, மே 20 (செவ்வாய்கிழமை) அன்று ரூ.25000/– வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்" என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பிற்கு தலா ஒருவர் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவர்களது மனு ஏற்கப்பட்டு,

சென்னை தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக

**திரு. களக்காடி எல்லப்பன்**
*5/3, 72வது தெரு,*
*ஆர்.வி. நகர்,*
*ஜாபர்கான்பேட்டை,*
*சென்னை - 600083* அவர்களும்;

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக

**திரு. ஜிஜேந்திரன் ராமு,**
*4, கம்பர் தெரு,*
*நந்திவரம் - கூடுவாஞ்சேரி,*
*செங்கல்பட்டு - 603202* அவர்களும்;

சேலம் கிழக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக

**திருமதி. என். அன்னபூரணி**
*டி.எஸ்.பி. தோட்டம்,*
*ஊனத்தூர் வழி,*
*தலைவாசல், ஆத்தூர் தாலுக்கா,*
*சேலம் மாவட்டம்.*

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக

**திரு. ஆர். கருப்பையா**
*228, புதூர், ராயவரம் அஞ்சல்,*
*திருமயம் தாலுக்கா,*
*புதுக்கோட்டை மாவட்டம்.* ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை – 18.
நாள் : 21–05–2025.

துரைமுருகன்
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

# தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக அலுவலக பணியாளர் முன்னேற்ற சங்க நிர்வாகிகள்!

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக அலுவலக பணியாளர் முன்னேற்றச் சங்கத்தின் நிர்வாகிகளாக (பதிவு எண். 118/ANNA, பேரவை இணைப்பு எண். 703) கீழ்க்கண்டவர்கள் அறிவிக்கப்படுகிறார்கள்.

### சங்க நிர்வாகிகள்

தலைவர் - ஏ. மார்ட்டின் லூயிஸ் (பணி எண். 45017)

துணைத் தலைவர் - எம். சூர்யபிரகாஷ் (பணி எண். 35013)

பொதுச்செயலாளர் - எஸ். குமரேசன் (பணி எண். 30825)

துணைப்பொதுச்செயலாளர் - ஆர்.சீனிவாசன் (பணி எண். 30828)

பொருளாளர் - எஸ். சரவணன் (பணி எண். 30882)

செயலாளர் - என். முத்துராஜ் (பணி எண். 35050)

பொதுக்குழு உறுப்பினர்கள் -

1) ஆர்.பேச்சம்மாள் (பணி எண். 30860)
2) டி. தினேஷ்குமார் (பணி எண். 35012)
3) பி.தங்கமணி (பணி எண். 45213)

**இடம் : கலைஞரகம்**
நாள்- 21.05.2025

**மு.சண்முகம் எம்.பி.,**
பொதுச் செயலாளர்
தொ.மு.ச. பேரவை



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் நேற்று முன்தினம் 20.05.2025 செவ்வாய்க்கிழமை அன்று தனது ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருக்கோவிலூர் மேற்கு ஒன்றியம், மாடாம்பூண்டி ஊராட்சியில், தமிழ்நாடு நரிக்குறவர்கள் பங்கேற்கும் மாநில அளவிலான மாபெரும் கிரிக்கெட் போட்டியினை துவக்கி வைத்து, விளையாட்டு வீரர்களுக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்ந்தார், மேலும் இந்த நிகழ்வின் போது மாநில, மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் என ஏராளமானோர் திரளாக கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் வளத்தியில் ரூ 2.32 கோடி மதிப்பீட்டில் புதிய சார்பதிவாளர் அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பணியை தொடங்கி வைத்தார். உடன் மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் கற்பகம், மாவட்ட பதிவாளர் தணிகை ராஜேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், மாவட்ட கவுன்சிலர் செல்வி ராம சரவணன், வளத்தி சார் பதிவாளர் முருகன், ஊராட்சி மன்ற தலைவர் விஜயலட்சுமி ஜெய்சங்கர் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.